## கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா பிறந்த நாள்:

# மொழியுரிமை - சமூக நீதியை உயர்த்திப் பிடிப்பதில் தங்களது வலிமையான குரல் மக்களாட்சி உணர்வை வெளிப்படுத்துகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஆக. 4 -**

**கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**



கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா அவர்களுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகள்.

மொழியுரிமைகளைக் காப்பதிலும், சமூகநீதியை உயர்த்திப் பிடிப்பதிலும் தங்களது வலிமையான குரல் உண்மை யான கூட்டாட்சியியல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய மக்களாட்சி உணர்வை வெளிப்படுத்துகிறது. இன்றைய இந்தியாவில் இக்கொள்கைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற வகையில், தமிழ்நாட்டு மக்களும் கர்நாடக மக்களும் அவற்றை நிலை நிறுத்துவதில் ஒன்றிணைந்து நிற்க வேண்டும்.

தாங்கள் தொடர்ந்து வலிமையோடும் மகிழ்ச்சியோடும் நீண்ட ஆயுளோடும் திகழ விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## பீகார் மாநிலத்தவரை

# தமிழ்நாட்டில் வாக்காளர்களாகச் சேர்ப்பது சட்ட விரோதம்!

சென்னை, ஆக. 4 -

பீகார் மாநிலத்தவரை தமிழ்நாட்டில் வாக்காளர்களாக சேர்ப்பது சட்ட விரோதம் என, முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் குற்றம் சாட்டியுள்ளார். தேர்தல் ஆணையம் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி மாநிலத்தின் தேர்தல் சூழலை மாற்ற முயற்சிப்பதாகவும் அவர் விமர்சித்துள்ளார்.



காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் வாக்குரிமை இழக்கப்படும் அபாயத்தில் உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 6 லட்சத்து 50 ஆயிரம் பேரை வாக்காளர்களாக சேர்ப்பது என்பது சட்டவிரோதமானது என்று கூறியுள்ளார்.

பீகார் தொழிலாளர்களை நிரந்தரமாக இடம்பெயர்ந்தவர்கள் என்று அழைப்பது புலம் பெயர்ந்த தொழிலாளர்களை அவமதிப்பதாகும் என்று ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். மேலும், தமிழக வாக்காளர்கள் தங்கள் விருப்பப்படி ஒரு அரசை தேர்ந்தெடுக்கும் உரிமையில் தலையிடும் செயல் என்றும் அவர் கூறியுள்ளார்.

புலம்பெயர்ந்த பீகார் தொழிலாளி, தங்கள் மாநில சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்க ஏன் செல்லக் கூடாது, சத் பூஜை பண்டிகையின்போது, புலம் பெயர்ந்த தொழிலாளி பீகாருக்கு திரும்பவில்லையா என்று ப.சிதம்பரம் கேள்வி எழுப்பியுள்ளார்.

வாக்காளராக பதிவு செய்யப்பட வேண்டிய ஒருவருக்கு நிலையான, நிரந்தர சட்டப்பூர்வ வீடு இருக்கவேண்டும், புலம் பெயர்ந்த தொழிலாளிக்கு பீகாரில் நிரந்தர முகவரி உள்ள நிலையில், அவரை தமிழ்நாட்டில் எப்படி வாக்காளராக பதிவு செய்ய முடியும் என்று அவர் வினவியுள்ளார். தேர்தல் ஆணையம் தனது அதிகாரங்களை துஷ்பிரோயகம் செய்து, மாநிலங்களின் தேர்தல் தன்மை மற்றும் முறைகளை மாற்ற முயற்சி செய்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த அதிகார துஷ்பிரயோகத்தை அரசியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும் எதிர்த்து அனைவரும் போராடவேண்டும் என்றும் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




இராணிப்பேட்டை ஜி.கே.மில்லினியா ஓட்டலில் நடைப்பெற்ற "ஓரணியில் தமிழ்நாடு(வடக்கு மண்டலம்) ஆய்வுக் கூட்டம் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் , வடக்கு மண்டல பொறுப்பாளர் எ.வ.வேலு தலைமையில் நடந்தது. கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, சுற்றுலா துறை அமைச்சர் ராஜேந்திரன், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எம்.எல்.ஏ.க்கள், தொகுதிப் பார்வையாளர்கள், தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# விவசாயிகளுக்கு நிஜ பட்ஜெட்டை அளித்து அள்ளிக் கொடுத்தோம்!

## ஒகேனக்கல்லில் – ஆடிப் பெருக்கு விழாவில் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

தருமபுரி, ஆக. 4 -

ஒகேனக்கல்லில் ஆடி பெருக்கு விழாவை - தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார்.

தருமபுரி மாவட்ட சுற்றுலாத் துறை சார்பில் ஒகேனக்கல்லில் மூன்று நாள் நடைபெறும் ஆடி பெருக்கு விழாவின் முதல் நாளில் தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் பேசியதாவது:



எடப்பாடி பழனிசாமி சுந்தரா ட்ராவல்ஸ் பேருந்தில் பயணம் செய்கிறார்,அது ஒரு காமெடி பீஸ்,மேலும் அன்புமணி உரிமை மீட்போம் என சொல்கிறார். எந்த உரிமையை மீட்க போகிறார் என்று தெரியவில்லை.அது ஜி.கே.மணிக்கு தான் தெரியும். எதை மீட்க போராடுகிறார் என்று, என்னத்த செஞ்சிங்க, என்று கேட்டு கொண்டே இருக்கிறார். எவன் செய்தாலும், நாங்க தான் செய்தோம், நாங்க தான் செய்தோம் என்று சொல்வதை தவிர வேறு எதையும் அவர்கள் செய்ததில்லை. இட ஒதுக்கீடு கேட்பதோடு சரி,ஆனால் இன்றைய தினம் அதற்கான சட்டத்தை கொண்டு வந்தது தி.மு.க. தான்.

பா.ம.க. நிழல் பட்ஜெட் போட்டார்கள், நாங்கள் நிஜ பட்ஜெட்டை போட்டு ஆட்சி நடத்தினோம்.

விவசாயிகளுக்கு நலத் திட்டங்களை அள்ளி கொடுத்தோம். இவர்கள் இட ஒதுக்கீடுகள் கேட்டு போராட்டம் நடத்தி, பேருந்தை நிறுத்தினார்கள்.

மரத்தை வெட்டினார்கள்.ஆனால் அப்போதைய அ.தி.மு.க. ஆட்சியில் எம்.ஜி.ஆர். அதையெல்லாம் கண்டு கொள்ளவில்லை. துப்பாக்கி சூடு நடத்தியதில் 21 பேர் உயிரிழந்தனர், ஆனால் யாரும் கேள்வி கேட்கவே இல்லை. தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் முத்த மிழறிஞர் கலைஞர் அவர்கள், ராமதாஸ், வீர பாண்டியாரை அழைத்து பேசி வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்தார்.

என்னவோ தெரியவில்லை. இப்போது அன்புமணி மக்கள் உரிமையை மீட்க போகிறேன் என்று சொல்கிறார். என்ன உரிமையை மீட்க போகிறார் அப்பாவிடம் உரிமையை கேட்க போகிறாரா?

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி, எம்.எல்.ஏ ஜி.கே.மணி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ். மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, கோட்டாச்சியர் காயத்ரி, முன்னாள் எம்.எல்.ஏ மற்றும் முன்னாள் மாவட்ட செயலாளர்கள், தடங்கம்.சுப்ரமணி, பி.என்.பி.இன்ப சேகரன், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழகத்தினர், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## முத்தமிழறிஞர் கலைஞரின் ஏழாம் ஆண்டு நினைவு நாள்!

# சென்னை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைகள் வழங்கினார்!

சென்னை, ஆக.4-

பேரறிஞர் பெருந்தகை அண்ணா உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அவர் கட்டமைத்த ஆட்சியையும் கட்டிக் காத்து, அரை நூற்றாண்டு காலம் இந்த இயக்கத்திற்குத் தலைமை தாங்கி, 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 19 ஆண்டுகாலம் சிறப்பான நிர்வாகத்தை அளித்து, நவீனத் தமிழ்நாட்டைக் கட்டி எழுப்பிய சிற்பியான நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரின் 7-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை ஓட்டேரி எண் 7 செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெற்ற சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி செயலாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு ஆலோசனைகள் வழங்கினார்.

வங்கக் கடலோரம் இதயத்தை இரவலாகத் தந்த பேரறிஞர் அண்ணா வோடு நிரந்தர ஓய்வு கொள்ளும் முத்தமிழறிஞர் நினைவிடம் நோக்கி நடைபெறும் அமைதிப் பேரணியில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட உடன் பிறப்புகள் திரளாக கலந்து கொண்டு வீர வணக்கம் செலுத்துவதென்றும்.. மேலும் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 83 வட்டங்களிலும் முத்தமிழறிஞர் நினைவைப் போற்றும் வகையில் அவர்தம் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி நலத்திட்ட உதவிகள் வழங்க முடிவெடுத்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றி அழகன, ஜோசப் சாமுவேல், ப.ரங்கநாதன், பி.கே.மூர்த்தி, கே. சந்துரு, சி.மகேஷ் குமார், எம்.விஜயகுமார், கே.எஸ். எம்.நாதன்,

கூ.பி.ஜெயின், வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன், டிஎஸ்பி.ராஜகோபால், எம் டிஆர்.நாகராஜ், சொ. வேலு. வி.சுதாகர், எஸ். முரளி, எஸ்.ராஜசேகர். சரிதா மகேஷ்குமார்,

அமைப்பாளர்கள்: வானவில்விஜய், எல்.பி.எப். மோகன், ஜி.தாமோதரன், பி.விஜயகுமார், இரா.வீரமணி, மா.அசோக்குமார், கு. கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி. பி.பிரதீப்குமார், எல்.சம்பத் குமார், எம்.விநாயகம், து. ஆயிரம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி. நாகவள்ளி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞரின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி குறித்து சென்னை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் பகுதி செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் – மாவட்ட செயலாளர் பி.கே.சேகர் பாபு ஆலோசனைகள் வழங்கினார்.

## சென்னையில் 7-ஆம் தேதி காலை கழகத் தலைவர் தலைமையில் நடைபெறும்

# கலைஞர் நினைவுநாள் அமைதிப் பேரணியில் கழகத்தினர் அலைகடலென திரண்டு வாரீர்!

## காஞ்சி வடக்கு மாவட்ட கழகத்தினருக்கு – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

**காஞ்சிபுரம், ஆக.4-**

**சென்னையில் 7ஆம் தேதி காலை முதல்வர் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் அலைகடலென திரண்டு வாரீர் என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழே உயிராக தமிழர் வாழ்வே மூச்சாக தமிழ் நாட்டின் உயர்வே தன் வாழ்வாகக் கொண்டு தமிழினத் தலைவராக மக்கள் மனங்களில் நிறைந்தவர் நம் உயிர் நிகர் கலைஞர் அவர்கள், அவர் மறைந்து 7 ஆண்டு காலம் ஆனாலும் இன்றைக்கும் தமிழ்நாட்டு மக்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்துள்ளார் அவர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய தி.மு.க.வையும், அவர் கட்டமைத்த ஆட்சியையும் கட்டிக்காத்து, அரை நூற்றாண்டு காலம் இப்பேரியக்கத்திற்கு தலைமை தாங்கி, 5 முறை தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக பொறுப்பேற்று, 19 ஆண்டு காலம் சிறப்பான பொற்கால ஆட்சியை தந்து நவீனத் தமிழ் நாட்டை கட்டி எழுப்பிய நவீன சிற்பி அவர்.

அத்தகைய சிறப்புக்களை பெற்ற மக்கள் போற்றி வணங்கும் மாபெரும் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாளான வருகிற ஆகஸ்ட் 7ஆம் தேதி காலை சென்னையில் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெற உள்ளது.



வங்க கடற்கரையில் தன் இதயம் நிறைந்த அண்ணனுடன் நிரந்தர ஓய்வு கொண்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடம் நோக்கி ஆகஸ்ட் 7ஆன்று நடைபெறும் அமைதிப் பேரணியில் உடன் பிறப்புகள் அனைவரும் கடலெனத் திரண்டு வணக்கத்தை செலுத்துவோம் என்று நம் நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் தளபதி அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று, சென்னையில் 7ஆம் தேதி காலை நடைபெறும் கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் கழக நிர்வாகிகள் அனைவரும் அலை வரும் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்று நம்முடைய மகத்தான தலைவருக்கு மரியாதை செலுத்துவோம் என்று அன்புடன் அழைக்கிறேன்.

அத்துடன் மாவட்டத்தில் உள்ள கலைஞர் திருஉருவச்சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும் என்றும், கழக கிளைகளிலும் வீதிகளிலும், வீடுகளிலும் முத்தமிழறிஞர் கலைஞர் திருஉருவப் படங்களை மலர் மாலை அணிவித்து அலங்கரித்து வைத்து மலர் தூவி வணக்கம் செலுத்திடுவோம் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



திருப்போரூர் ஒன்றியம், கொளத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த பா.ம.க மாவட்ட இளைஞர் அணி துணை செயலாளர் வி.பாலசந்தர், கிளைச் செயலாளர் எஸ்.சத்யா, காயார் ஊராட்சியைச் சேர்ந்த பா.ம.க. ஒன்றிய துணை செயலாளர்கள் சுரேஷ், தயாளன், ஒன்றிய இளைஞர் அணி துணை செயலாளர்கள் லோகேஷ், விஜயகுமார் ஆகியோர் தலைமையில் 50க்கும் மேற்பட்ட பா.ம.க.வினர் அக்கட்சியில் இருந்து விலகி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். அருகில் திருப்போரூர் ஒன்றியக்குழு தலைவர் எல்.இதயவர்மன், ஒன்றியக்குழு உறுப்பினர் அருண்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.